ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஆய்ச்சியர் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஆய்ச்சியர் ॥

## திருவெள்ளியங்குடி

‡ஆய்ச்சியர் அழைப்ப வெண்ணெய் உண்டொரு கால்⋆
ஆல் இலை வளர்ந்த எம் பெருமான்⋆
பேய்ச்சியை முலயுண்டிணை மருதிறுத்துப்⋆
பெரு நிலம் அளந்தவன் கோயில்⋆
காய்த்த நீள் கமுகும் கதலியும் தெங்கும்⋆
எங்குமாம் பொழில்களின் நடுவே⋆
வாய்த்த நீர் பாயும் மண்ணியின் தென்பால்⋆
திருவெள்ளியங்குடி அதுவே (1)

ஆநிரை மேய்த்தன்றலை கடல் அடைத்திட்டு⋆
அரக்கர் தம் சிரங்களை உருட்டி⋆
கார் நிறை மேகம் கலந்ததோருருவக்⋆
கண்ணனார் கருதிய கோயில்⋆
பூ நீரைச் செருந்தி புன்னை முத்தரும்பி⋆
பொதும்பிடை வரிவண்டு மிண்டி⋆
தேன் இரைத்துண்டங்கின் இசை முரலும்⋆
திருவெள்ளியங்குடி அதுவே (2)

கடுவிடம் உடைய காளியன் தடத்தைக்⋆
கலக்கி முன் அலக்கழித்து⋆ அவன் தன்
படம் இறப்பாய்ந்து பல் மணி சிந்தப்
பல் நடம் பயின்றவன் கோயில்⋆
படவரவல்குல் பாவை நல்லார்கள்⋆
பயிற்றிய நாடகத்தொலி போய்⋆
அடைபுடை தழுவி அண்டம் நின்றதிரும்⋆
திருவெள்ளியங்குடி அதுவே (3)

கறவை முன் காத்துக் கஞ்சனைக் காய்ந்த⋆
    காளமேகத் திருவுருவன்⋆
பறவை முன்னுயர்த்து பாற் கடல் துயின்ற⋆
    பரமனார் பள்ளிகொள் கோயில்⋆
துறைதுறைதோறும் பொன் மணி சிதறும்⋆
    தொகு திரை மண்ணியின் தென்பால்⋆
செறி மணி மாடக் கொடி கதிர் அணவும்⋆
    திருவெள்ளியங்குடி அதுவே (4)

பாரினை உண்டு பாரினை உமிழ்ந்து⋆
    பாரதம் கையெறிந்து⋆ ஒருகால்
தேரினை ஊர்ந்து தேரினைத் துரந்த⋆
    செங்கண் மால் சென்றுறை கோயில்⋆
ஏர் நிரை வயலுள் வாளைகள் மறுகி⋆
    எமக்கிடம் அன்றிதென்றெண்ணி⋆
சீர் மலி பொய்கை சென்றணைகின்ற⋆
    திருவெள்ளியங்குடி அதுவே (5)

காற்றிடைப் பூளை கரந்தன அரந்தை
    உறக்⋆ கடல் அரக்கர் தம் சேனை⋆
கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த⋆
    கோல வில் இராமன் தன் கோயில்⋆
ஊற்றிடை நின்ற வாழையின் கனிகள்⋆
    ஊழ்த்துவீழ்ந்தன உண்டு மண்டி⋆
சேற்றிடைக் கயல்களுள் திகழ் வயல் சூழ்⋆
    திருவெள்ளியங்குடி அதுவே (6)

ஒள்ளிய கருமம் செய்வன் என்றுணர்ந்த⋆
    மாவலி வேள்வியில் புக்கு⋆
தெள்ளிய குறளாய் மூவடி கொண்டு⋆
    திக்குற வளர்ந்தவன் கோயில்⋆
அள்ளியம் பொழில் வாய் இருந்துவாழ் குயில்கள்⋆
    அரியரி என்றவை அழைப்ப⋆

வெள்ளியார் வணங்க விரைந்தருள் செய்வான்⋆
    திருவெள்ளியங்குடி அதுவே (7)

முடியுடை அமரர்க்கிடர் செய்யும்⋆ அசுரர்
    தம் பெருமானை⋆ அன்றரியாய்
மடியிடை வைத்து மார்வைமுன் கீண்ட⋆
    மாயனார் மன்னிய கோயில்⋆
படியிடை மாடத்தடியிடைத் தூணில்⋆
    பதித்த பன் மணிகளின் ஒளியால்⋆
விடி பகல் இரவென்றறிவரிதாய⋆
    திருவெள்ளியங்குடி அதுவே (8)

குடி குடியாகக் கூடி நின்றமரர்⋆
    குணங்களே பிதற்றி நின்றேத்த⋆
அடியவர்க்கருளி அரவணைத் துயின்ற⋆
    ஆழியான் அமர்ந்துறை கோயில்⋆
கடியுடைக் கமலம் அடியிடை மலரக்⋆
    கரும்பொடு பெருஞ்செந்நெல் அசைய⋆
வடிவுடை அன்னம் பெடையொடும் சேரும்⋆
    வயல் வெள்ளியங்குடி அதுவே (9)

‡பண்டு முன் ஏனம் ஆகி அன்றொருகால்⋆
    பார் இடந்தெயிற்றினில் கொண்டு⋆
தெண் திரை வருடப் பாற்கடல் துயின்ற⋆
    திருவெள்ளியங்குடியானை⋆
வண்டறை சோலை மங்கையர் தலைவன்⋆
    மான வேல் கலியன் வாய் ஒலிகள்⋆
கொண்டிவை பாடும் தவம் உடையார்கள்⋆
    ஆள்வர் இக்குரை கடல் உலகே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥